செய்தி வெளியீடு எண்: 465 நாள்: 17.07.2018

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில், அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் மற்றும் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்

தமிழ்நாடு அரசு அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் மற்றும் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டமானது, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில் இன்று (17.07.2018) காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், P.W.C. டேவிதார் இ.ஆ.ப., அனைத்து போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குநர்கள், பொது மேலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திற்கு தலைமையேற்ற மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தமது உரையில், “மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பொது மக்களின் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்வதில் நமது அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன. போக்குவரத்துச் சேவையினை மேம்படுத்திடும் உயரிய நோக்கில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 2016ஆம் ஆண்டில் 516 கோடி ரூபாய் செலவில், 2000 அதிநவீன பேருந்துகளும், 100 சிற்றுந்துகளும் வாங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அம்மா வழியில் நல்லாட்சியினைத் தொடர்ந்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அதற்குச் சான்றாக, கடந்த 3.7.2018 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில், 134.53 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ள புதிய பேருந்துகளை தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். அரசு போக்குவரத்துக் கழகங்களின் வரலாற்றில் முதன்முறையாக, படுக்கை வசதி, கழிவறை வசதி,

மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிடும் ஒலிக் கருவி, பேருந்து நிறுத்தங்களை பயணிகளுக்கு தெரிவித்திடும் வசதி, பேருந்து நிலையங்களில் இவ்வகை பேருந்துகளை ஓட்டுநர்கள் தாமாகவே குறித்த இடத்தில் நிறுத்தம் செய்திட ஏதுவாக நவீன சென்சார் கருவி, நீண்ட தூர பயணங்களில் ஓட்டுநர் சோர்வடைவதை தவிர்த்திடும் எச்சரிக்கை ஒலிக் கருவி உள்ளிட்ட பல நவீன வசதிகளை கொண்டுள்ள பேருந்துகள் மற்றும் இடைநிறுத்தம் இல்லாத பேருந்துகள் பொது மக்களை பெரிதும் கவர்ந்துள்ளன.

மக்களின் நலன்களில் அதிக அக்கறை கொண்டுள்ள அம்மாவின் ஆசி பெற்றுள்ள இந்த அரசு இந்த ஆண்டு (2018–2019) 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மேலும், 3,000 புதிய பேருந்துகள் வாங்கிட முடிவு செய்யப்பட்டு, அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை இத்தருணத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், அன்றைய தினம் சட்டப்பேரவையில், நமது போக்குவரத்துத்துறை மானியக் கோரிக்கையில், போக்குவரத்துத்துறையின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத வகையில்,

- புதிய போக்குவரத்துக் கொள்கை,
- சுற்றுச்சூழலை பாதுகாத்திடும் வண்ணம், மின்கலன் அல்லது மின்சாரத்தில் இயங்கும் பேருந்துகள் அறிமுகம்,
- மாவட்ட அளவில் போக்குவரத்துச் சேவையினை மேம்படுத்துதல்,
- பணிமனைகள் மற்றும் கிளைகளின் வரவு செலவுகளை நிதி பகுப்பாய்வு மூலம் மேம்படுத்துதல்,
- விற்பனையாளர் தரவரிசை அறிமுகம்,
- அனைத்துப் போக்குவரத்துக் கழங்களையும் ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைத்து கணினிமயமாக்குதல்,
- அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளை நவீனப்படுத்துதல்,

- மேலை நாடுகளில் நடைமுறையிலுள்ள புதிய வசதிகள் மற்றும் சேவைகள் அறிமுகம்,

உள்ளிட்ட 21 புதிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. நமது துறையின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிப்புகள் அனைத்தையும் விரைந்து செயல்படுத்திட வேண்டும் என்கிற அடிப்படையில், இந்த ஆய்வுக்கூட்டம் இன்றைய தினம் நடத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

மேலும் தமது உரையில், குறிப்பாக, கடந்த ஓராண்டில், போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் நிகழ்த்தப்பட்டுள்ள சாதனைகளாக,

- அனைத்து தொழிலாளர்களின் ஒன்றுபட்ட உழைப்பின் பயனாக, போக்குவரத்துத் துறையில் நிகழ்த்தப்பட்டுள்ள பல்வேறு செயல்திறன்களுக்காக, அனைத்திந்திய சாலைப் போக்குவரத்து கழகங்களின் கூட்டமைப்பின் (Association of State Road Transport Undertakings – ASRTU) விருதுகளை கடந்த 2013 ஆம் ஆண்டு முதற்கொண்டு தொடர்ந்து பெற்று மகத்தான சாதனை படைத்துள்ளது.
- கடந்த (2016–17) ஆண்டிற்கான 35 விருதுகளில் 11 விருதுகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகங்கள் பெற்று, இத்துறைக்கும், தமிழ்நாடு அரசுக்கும் பெருமையினைத் தேடித்தந்துள்ளது.
- தொழிலாளர் நலன்களில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள அம்மாவின் அரசு, **2,247.39** கோடி ரூபாய் தொழிலாளர்களுக்கான நிலுவைத் தொகை வழங்கப்பட்டுள்ளது.
- சாலைப் போக்குவரத்து நிறுவன மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 45 வயதுக்கு மேற்பட்ட அனைத்து

தொழிலாளர்களுக்கான முழுஉடற்பரிசோதனைத்திட்டத்தின்கீழ், ஏறத்தாழ **55,772** தொழிலாளர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு, **24,627** தொழிலாளர்களுக்கு தொடர் சிகிச்சையும் வழங்கப்பட்டுள்ளது.

- மேலும், **1.20** கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள நவீன சி.டி. ஸ்கேன் கருவி மூலம், **19,672** தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர். **1.93** கோடி ரூபாய் செலவில், **354** தொழிலாளர்களின் ஓய்வறைகள் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- பெருந்துறை மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்புக்காக 100 இடங்களில் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஆண்டுதோறும் 30 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
- சென்னை மாநகரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டையானது, **52.97** கோடி ரூபாய் செலவில், **3,11,930** பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- **541.78** கோடி ரூபாய் செலவில், **27,84,785** மாணவ மாணவியர்களுக்கு கையடக்க கட்டணமில்லா மற்றும் 50 விழுக்காடு பேருந்து பயண சலுகை அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

நமது போக்குவரத்துத் துறையில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை திறம்பட செயல்படுத்தி தேசிய அளவில் பெற்று வரும் விருதுகளை தொடர்ந்து பெறுவதோடு, பொதுமக்களுக்கு மேலும் பயன் தருகின்ற வகையில் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவைகள் தொய்வின்றித் தொடர்ந்திட அலுவலர்களாகிய நீங்கள் அனைவரும் அர்ப்பணிப்போடு பணியாற்றி, துறைக்கு பெருமை சேர்ந்திட வேண்டும்." என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**